<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 926/2023**</u>

<u>**வழக்கு சாட்சி PW-3**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கடற்கரைசாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தங்கச்சாமி | தொழில் | : | வொர்க் ஷாப் |
| கிராமம் | : | தன்னூத்து | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 17th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தன்னூத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சேர்ந்தமரம் காவல்நிலையத்திற்கு அருகில் பைக் வொர்க் ஷாப் வைத்து வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். நான் அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து போட்டு கொடுத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 23.11.2017ம் தேதி, 09.30 மணிக்கு தன்னூத்தில் உள்ள மாரியப்பன் வீட்டு பக்கம் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்

தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், சமுத்திரபாண்டி என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.18 14:24:00 +0530